# அக்டோபர் – 29 – பொதுக்கால 30 ம் ஞாயிறு

உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மத்.22:39)

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 22 : 20 - 26

ஆண்டவர் கூறுவது: அன்னியனுக்கு நீ தொல்லை கொடுக்காதே! அவனைக் கொடுமைப்படுத்தாதே. ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராயிருந்தீர்கள்.விதவை, அனாதை யாருக்கும் நீ தீங்கிழைக்காதே.நீ அவர்களுக்குக் கடுமையாகத் தீங்கிழைத்து அவர்கள் என்னை நோக்கி அழுது முறையிட்டால், நான் அவர்கள் அழுகுரலுக்குச் செவிசாய்ப்பேன்.மேலும் என்சினம் பற்றியெரியும். நான் உங்களை என் வாளுக்கு இரையாக்குவேன். இதனால் உங்கள் மனைவியர் விதவைகளாவர். உங்கள் பிள்ளைகள் தந்தையற்றோர் ஆவர்.உங்களோடிருக்கும் என் மக்களில் ஏழை ஒருவருக்கு நீ பணம் கடன் கொடுப்பாயானால், நீ அவர்மேல் ஈட்டிக்காரன் ஆகாதே. அவரிடம் வட்டி வாங்காதே.பிறருடைய மேலாடையை அடகாக நீ வாங்கினால், கதிரவன் மறையுமுன் அதை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிடு.

**பதில்பாடல் :** என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம்
நான் அன்பு கூர்கிறேன்

## இரண்டாம் வாசகம் : 1 தெசலோனி 1 : 5 – 10

சகோதர சகோதரிகளே! நாங்கள் நற்செய்தியை உங்களுக்கு வெறும் சொல்லளவிலன்றி, தூய ஆவி தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ள உறுதியோடும் கொண்டுவந்தோம். உங்கள் பொருட்டு நாங்கள் உங்களிடையே எவ்வாறு நடந்துகொண்டோம் என்பதும் உங்களுக்குத் தெரியும்.மிகுந்த வேதனை நடுவிலும் நீங்கள் தூய ஆவி அருளும் மகிழ்வோடு இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டீர்கள். இவ்வாறு எங்களைப்போலவும் ஆண்டவரைப் போலவும் நடப்பவரானீர்கள்.மாசிதோனியாவிலும் அக்காயாவிலும் உள்ள, நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் முன் மாதிரியானீர்கள். எப்படியெனில் ஆண்டவருடைய வார்த்தை உங்கள் நடுவிலிருந்தே பரவியது. கடவுள்மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பது மாசிதோனியாவிலும் அக்காயாவிலும் மட்டும் அல்ல, எல்லா இடங்களிலும் தெரியவந்துள்ளது. எனவே இதைப்பற்றி நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை.நாங்கள் உங்களிடம் வந்தபோது எவ்வாறு நீங்கள் எங்களை வரவேற்றீர்கள் என்று அவர்களே கூறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு சிலைகளை விட்டுவிட்டு, உண்மையான, வாழும் கடவுளுக்கு ஊழியம்புரியக் கடவுளிடம் திரும்பி வந்தீர்கள் என்றும் கூறிவருகிறார்கள்.இவ்வாறு நீங்கள் வானினின்று வரும் அவருடைய மகன் இயேசுவுக்காகக் காத்திருக்கிறீர்கள். அவரே வரப் போகும் சினத்திலிருந்து நம்மை மீட்பவர். இறந்த அவரையே தந்தை உயிர்த்தெழச் செய்தார்.

## நற்செய்தி : மத்தேயு 22 : 34 - 40

அக்காலத்தில் இயேசு சதுசேயரை வாயடைக்கச் செய்தார் என்பதைக் கேள்விப்பட்ட பரிசேயர் ஒன்றுகூடி அவரிடம் வந்தனர்.அவர்களிடையே இருந்த திருச்சட்ட அறிஞர் ஒருவர் அவரைச் சோதிக்கும் நோக்கத்துடன்,"போதகரே, திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?" என்று கேட்டார்.அவர், "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து."இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை."உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக" என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை.திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன" என்று பதிலளித்தார்.

**தியானம் :** நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடனபடிக்கையின் மக்கள். ஆகவேதான் கிறிஸ்து வெளிப்படுத்தும் அன்பையும், இரக்கத்தையும் நாம் அறிந்துணர்ந்து பிறரோடு அவற்றைப் பகிர்ந்துவாழ இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைத்த நிற்கின்றன. விடுதலைப்பயண நூலில் இருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதலாவது வாசகத்தில் எகிப்து நாட்டினின்று விடுவிக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்கு மோசே மூலமாக கடவுள் சில அன்புக் கட்டளைகளை கொடுத்திருப்பதை நாம் பாரக்கின்றோம். யாருக்கும் தொல்லை கொடுக்காதே, விதவைகள், அனாதைகள் யாருக்கும் தீங்கு இழைக்காதே, கடன் கொடுத்தால் அவர்களைக் கொடுமைப்படுத்தாதே என்கின்றார். அவ்வாறே நற்செய்தியிலும் இறைமகன் இயேசுவின் போதனைகளிலும், அவரது செயல்களிலும் இந்த அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் என்று எம்மைப் பெருமைப்படுத்திக் கொள்கின்றோம். நாங்கள் கிறிஸ்துவுக்குள் சாட்சிகளாய் வாழும் கட்டாயத்தில் உள்ளோம். கடவுளை முழுமையாக அன்பு செய்வதோடு மட்டும் நின்றுவிடாது அவருடைய சாயலாகப் படைக்கப்பட்ட சக மனிதர்களையும் முழு மனதுடன் அன்பு செய்ய வேண்டும். மனித மாண்புகள் மதிக்கப்படவும் சுயநலம் மறந்து, பிறர்நலம் நாடுபவர்களாகவும் வாழ்வோம். பிறரன்பில் இறையன்பைக் காண்போம். இறையாட்சி இம்மண்ணில் மலர உழைப்போம்.